தென்னகம்

ஆசிரியர்: K.A.மதியழகன்

...ர் - 1 | 8-1-60 வெள்ளி | இதழ்-51, 52

திருச்செந்தூர் வேலா! நின் திருவுளம் இதுதானா?

வெய்யிலில் அலைந்த பிறகுதான் நிழலின் அருமை தெரியும் என்பது தமிழ் மூதுரை;

அதைப்போலவே, மரியாதையின் உயர்வை. அவமரியாதைக்கு ஆளானபிறகுதான் மனிதன் உணர்கிறான்.

இந்தக்கிழமை தமிழ் நாட்டில் ஒரு சம்பவம் நடந்துவிட்டது. பன்னெடுங்காலமாகப் படமெடுத்தாடிய, பலரைத் தீண்டிப் பிணமாக்கிவந்த நச்சரவம் இடையில் சற்று மடிந்துக்கிடந்து இப்போது மீண்டும் தலை தூக்கத் தொடங்கிவிட்டது.

டெல்லி ரயில்வே அமைச்சர் எஸ். வி. ராமசாமி அவர்கள் திருச்செந்தூர் ஆலயங்களில் சிங்காரித்து மூக்கறுக்கப்பட்டுவிட்டார்! அவமானம் அமைச்சருக்கு மட்டுமல்ல; தமிழர்களுக்கே அவமானம்; அமைச்சர் பக்தவத்சலத்திற்குக்கூட அவமானம்!

திருச்செந்தூர் — கன்னியாகுமரிகோயில்களுக்குச்சென்று பணிவுடனும், பக்தியுடனும் தொழுது 'பிரசாதம்' கேட்ட அமைச்சர் ராமசாமியாரை அந்த ஆலயங்களின் அர்ச்சகர்கள் துச்சமென மதித்துவிட்டார்கள். அமைச்சருக்குச் சிறிதும் மதிப்புத் தராமல் அந்த அர்ச்சகர்கள் பிரசாதத்தை தூக்கி எறிந்திருக்கிறார்கள். தனது சுற்றுலா நாடகத்தில் இப்படி ஒரு 'திடீர்க்காட்சி' குறுக்கிடும் என்று அமைச்சர் எதிர்பார்த்திருக்க நியாயமில்லை. ஆனால் நடந்துவிட்டது. அதையும் நாலுபேர் பார்த்துவிட்டார்கள். நாடுபேசத் தொடங்கிவிட்டது. ஏடுகள் சீறுகின்றன. அமைச்சருக்கு ஆலயத்தில் அவமானமாமே! என்று சென்னையில் ஒரு நண்பரை இன்னொரு நண்பர் சந்திக்கும்போது முதல் [illegible]சாக இதைதான் கேட்கிறார்கள் கடந்த இரண்டு நாட்களாக!

காங்கிரசின் கண்களில் அதற்குள்ளாகவா பூ விழுந்து பழுதாகிப் போய்விட வேண்டும் என்று அனுதாபப்பட்ட பெருந்தகையாளர்களின் இதயங்கள் வெதும்பும் வகையில் இன்று காங்கிரஸ் தன் கண்களை அவித்துக்கொள்ளவும் துணிந்துவிட்டது.

இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிறது. 'ஆடுவோமே பள்ளுப் பள்ளுப் பாடுவோமே' என்ற இனிய சாகித்யத்தை இறுகத் தழுவி நாதம் எழுப்பும் நர்த்தன ஒலி.

'காந்தியோ பரமசந்நியாசி நம்மைக் காத்திடும் மகரிஷி' என்று கொடுமுடி கோகிலம் வானதிர எழுப்பிய கானக்குரல் இன்னும் காற்றில் மிதந்த வண்ணமிருக்கிறது. ஆனால் காந்தியார் பாடலுக்கு காந்தியார் பேனாவுக்கு காந்தியார் ராட்டைக்கு — கேவலம் காந்தியாரின் செருப்புக்குள்ள மதிப்பு அவரது உள்ளத்திற்கும் அவரது இலட்சியங்களுக்கும் இந்தக் காங்கிரஸ் கட்சியில் துளியும் இல்லை.

காங்கிரஸ் கட்சி கரம் உயர்த்தி பேராண்மை பெறுவதற்கு ஆற்றல் தரும் சுரபியாக இருந்தது தீண்டாமை ஒழிப்பு. அந்தக் கட்சியில் தீண்டாமை ஒழிப்புத்திட்டம்தான் மக்கள் அனைவருடைய ஆதரவினைப் பெறுவதற்குக்கு கவர்ச்சிமிக்க கொள்கையாக இருந்தது. தீண்டாமை அரவம் மறுபடியும் தலை நீட்டுகிறது. அதுவும் அமைச்சரிடமே நீட்டிவிட்டது. இந்த

தென்னரசு

அவமானம் அதிகார பீடத்திற்கே அறை கூவலாகும். இதுகுறித்து அமைச்சர் ராமசாமி கண்ணீர் வடித்துப் பேசிப் போயிருக்கிறார். நாகர்கோவிலில் நடந்த வழக்கறிஞர் மாநாட்டிலே ராமசாமியார் இதுபற்றிப் பேசியிருக்கிறார். ஆனால் மாநாட்டில் அது பற்றி அமைச்சரைப்பேசவிடாமல் தடுத்து விட்டார்ஒரு சட்டமேதை! யார் அவர்? சென்னை மாநில அட்வகேட் ஜெனரல் திரு. வெங்கடாச்சாரி! இந்தத் திருநாமத்தின் இறுதியில் தொங்கிக்கொண்டிருக்கும் ஜாதி பட்டம் அவருடைய 'மதா விலாசத்தைக் கபளீகாரம் செய்துவிட்டு அங்கே — அந்த மாநாட்டில் அவரை எழுந்து பேசவைத்துவிட்டது. திரு. வெங்கடாசசாரியாரானாலும் சரி, திருபெருந் திருவேங்கடாச்சாரியானாலும் சரி அமைச்சர் ராமசாமியார் அன்று நடைபெற்ற நாகர் கோயில் வழக்கறிஞர்கள் மாநாட்டில் பிரசாதச் சம்பவத்தைக் குறிப்பிட்டது தவறல்ல என்பது நமது வாதம். சமுதாயத்தைத் திருத்த வல்லது சட்டம். அந்தச் சட்டத்தைக் கற்றவர்கள் மத்தியில் கோயில்களில் நிலவும் இது போன்ற கொடுமைகளைக் களைந்தெறிய வேண்டும் என்று ஒரு அமைச்சர் பேசுவதைத் தவறு என்று கூறிவிட முடியுமா? மதுவிலக்கை அமுல் நடத்த சட்டத்தின் துணையை நம்பும் அரசாங்கத்தைச்சேர்ந்த ஒரு மந்திரி ஆலயத்து அர்ச்சகர்களின் கொடுமைகளை விரித்துரைக்க அவருக்குஉரிமை இல்லையா?

வடக்காவது தெற்காவது! எல்லாம் மாய்மாலம் என்றுதான் தி.மு.க. வைப்பார்த்துச் சொன்னார்ராமசாமியார். அதந்காக நாம், அவர் அவமானப்படும்போது கைகொட்டிச் சிரிக்கவில்லை.

இன்னொன்று!

அமைச்சர்ராமசாமியாருக்கு ஏற்பட்ட அவமானம் அங்கு மட்டுமல்ல! 'என்னை இப்படி அவமதித்துவிட்டார்கள்!' என்று அவர் தெரிவித்தது தவறு என்று 'மட ஆலயங்களின்' மந்திரி பக்தவத்சலம் வேறு பாய்ந்திருக்கிறார். அதுவும் பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கிறது.

பிரசாதத்தைத் தூக்கி எறிவது சம்பிரதாயம் என்று பக்த

(8-ம் பக்கம் பார்க்க)

அர்ச்சகர் அநாகரிகம்!

அவனியின் பவனி!

காமரூனில் விடுதலை தீபம்!

இருண்ட கண்டம் என்று உலகத்தாரால் அழைக்கப்படும் ஆப்பிரிக்கா கண்டத்தில் எங்கு திரும்பினும் விடுதலை முழக்கம் கேட்கிறது! செய்திப் பத்திரிக்கைகள் அனைத்தும் விடுதலைச் சேதிகளைச் சுமந்து வாராத நாட்களே இல்லை. கிளர்ச்சில் ஈடுபட்டுள்ள தலைவர்களின் நாமங்கள் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வருகின்றன. புத்தாண்டின் முதல் நாள் – மேலும் ஒருநாடு தனது தளையினை அறுத்து, விடுதலை கீதத்தை விண் முட்ட இசைத்துகொண்டுள்ளது. நாற்பது ஆண்டுகளாக பிரஞ்சு நாட்டின் கொடிய காலனி ஆதிக்கத்தின் கீழ்சிக்கி சொல்லொணுத் துயரை அநுபவித்த காமரூன் எனும் நாடுதான் ஜனவரித் திங்கள் முதல் நாள், விடுதலைத் தீபத்தை ஆப்பிரிக்க மண்ணில் ..ற்றியுள்ளது.

அடிமைப் பட்டுக் கிடக்கும் ..ற நாடுகளுக்கு காமரூனின் ..டுதலை, எழுச்சியும், நம்பிக்கை .. ..டத்தக்க நிகழ்ச்சியாகும். ..ன்று இல்லாவிட்டாலும் நாளை, ..ளை இல்லாவிட்டாலும் மறு ..ள் ... விரைவில் தங்களது ..காத்தடிமை தொலையும் — ..தந்திர புருஷர்களாக தங்க..ின் சொந்த மண்ணில் உலவ ..டியும் என்ற நம்பிக்கையான ..ண்ணம் அவர்களின இருண்ட ..ள்ளத்தில்ஒளியிடத்தான் செய்..ும், காமரூன் நாட்டு மக்களின் வாழ்க்கையில் முழு அளவு சுதந்திரம் கிடைத்து விட்டது ..ன்று சொல்ல முடியாது. எஜமானர்கள் மாறியுள்ளனர். அவ்வளவுதான். மக்களின் இதயத்தில் இடம் கொண்ட தலைவர்களின்கரத்திற்கு அதிகாரம்இன்னும் வரவில்லை. இதுவரையில் பிரெஞ்சுக் காரர்களின்நலனுக்கு அது துணையாக நின்ற 'அமாடொவ் அஹிஜோ' என்றபிரஞ்சுகைப் பொம்மைத் தலைவர் ஆட்சிப் பொறுப்பாளராகத் திகழ்கிருர். மக்கள்மன்றத்தில்இதற்கு பெருமளவு எதிர்ப்புக் காணப்படுகிறது. ஜனவரி முதல் நாள் அவர்களின் வாழ்வில் ஒரு திருநாள். விடுதலை நாள். அன்று கூட காமருனின் தலை நகரில் கலகமும், அமைதியின்மையும் நிலவியது என்ருல், மக்களின் உள்ளப் பாங்கை ஒருவாறு நம்மால் உணர முடிகிறது.

சுதந்திர தினத்தன்று " காமரூன் மக்க.. யூனியன் " என்ற அரசியல் கட்சிதான் முன்னின்று ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளது. காமரூன் மக்கள் யூனியன் கட்சி ஆழ்ந்த உறக்கத்திலிருுந்த காமரூன் மக்களை தட்டி எழுப்பி, விடுதலை வேட்கையை அவர்கள் உள்ளத்தில் ஊட்டியது! இதனை எவரும் குறைத்து மதிப்பிடுவதில்லை. பலமுள்ள அங்கீகரிட்டு அரசியல் கட்சி இதுதான் என்று பத்திரிக்கைகள் அனைத்தும் எடுத்துக் கூறுகின்றன. காமரூன் நாட்டில் தெற்கு மேற்குப் பகுதிகளில்இதற்கு நல்லபிடிப்பு உண்டு – மக்களின் மத்தியில் நல்ல செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

ஒவ்வொரு நாட்டு விடுதலை வரலாற்றிலும் இளைஞர்களின் பணிதான் சுவையுள்ள பகுதியாகும். அதற்கு காமரூன் நாடு மட்டும் எப்படி விதிவிலக்காக முடியும்? கொடுமைகள் கண்டால் கொதித் தெழும் இயல்பு நாட்டு இளைஞர்களுக்கு உண்டானதில் வியப்பில்லை. நாட்டின் உண்மைநிலைகள் மூடி மறைக்கப்பட்டு, தவருன சித்திரம் அவர்களின் முன்ஞல் காட்டப்பட்டால் கூட, சில நாட்கள் தான் அவர்களை உண்மையிலிருந்து மறைக்க முடியும் — காலம் அவர்களின் கண்களை நிச்சயம் திறக்கச் செய்யும். இது தான் காமருனிலுட நடைபெற்றுள்ளது.

காமரூன் நாட்டு இளைஞர்கள் உள்ளத்தில் விடுதலைத் தீ கொழுந்து விட்டெரிந்தது. அலை அலையாக விடுதலை அணியில் திரண்டனர். நாடுதான் நம்மை ஈன்றது. நமது உடல், ஆவி, பொருள் அனைத்தும் அதன் நலத்திற்குத்தான் என்று விடுதலைப் பண்பாடு செயலாற்றினர். பாரிஸ் பட்டணத்தில், பல்கலைக் கழகத்தில் எண்ணற்ற காமரூன் நாட்டுமாணவர்கள் பயின்றனர். நிழலின் அருமை வெய்யிலில் தானே தெரியும்! அன்னிய மண்ணில் உலவுகின்றபோது தான் தேசிய உணர்வின் வேகத்தை அவர்களால் தெளிவாக உணர்ந்துக்கொள்ள முடிந்தது. மற்ற நாட்டுக்

காமரூன் மக்கள் யூனியன் நடமாடும்எரிமலையானது ஏன்?

காரர்களுடன் நெருங்கிப் பழகும், வாய்ப்புக் ..டைத்தது. அவர்களுக்குள்ள தா..ட்டுப் பற்று, இவர்களின் உள்ளங்களில் மூடிக்கிடந்த தாயகப் பற்றை மொழி உணர்ச்சியை கிள்ர்ந்தெழச் செய்தது!

இந்த நிலைதான் காமரூன் நாட்டு மாணவர்களின் மத்தியிலும் உருவாகியது. துள்ளி வருகுதுவேல், தூர விலகிநில் பகையே! என்று எச்சரிக்கைதனை விடுத்து விடுதலைப்போரில் ஈடுபட்டனர். காமரூன் விடுதலைக் கட்சியான 'காமரூன் மக்கள் யூனியன்' காரியங்களில் மாணவர் படையே உயிர்ச்சக்தியாக மாறியது!

மக்கள்யூனியன் கட்சி இன்று நடத்தும் கிளர்ச்சியில் நிச்சயம் பொருளுண்டு காமரூன்மண்ணை ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக் காரர்களும் கூறுபோட்டு தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். இன்றையதினம் பிரெஞ்சு நாட்டு ஆதிக்கம் மட்டும்தான் மறைந்திருக்கிறது — ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் தொலையவில்லை — நீடிக்கிறது. இந்த நிலை கூடாது என்கிறது காமரூன் மக்கள் யூனியன்! நியாயம் தானே! இரு எஜமானர்களில் ஒருவர் ஒழிந்திருக்கிருன் – மற்ருெருவன் பிடி இன்னும் நீடிக்கிறது. இந்நிலை நீடிக்கும்போது காமரூன் மக்கள் வாழ்வில் முழு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று எப்படிக் கூறமுடியும்? ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவின் கீழ் இன்னும் ஒரு பகுதியில் அடிமைத்தனை நீடிக்கும்போது, முழு விடுதலை கேட்டுப் போராடிய ஒரு இயக்கம் எப்படி அமைதி கொள்ள முடியும். அன்னியர்கள் கொடுக்கும் பரிசுப் பொருள்கள் அல்ல–இழந்த நாட்டை மீட்கும் பணி. அதற்குப் பரிகாரம் காட்டாமல் ஆதிக்க வாதிகள் வாய்மூடி மௌனிகளாக உள்ளனர்.

நியாயமான முறையில்; மக்கள் எல்லோருக்கும் வாய்ப்பு அளித்து தேர்தல் நடத்த வேண்டும். தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளின் கரத்சில் தான் ஆட்சிப் பொறுப்பினை அளிக்க வேண்டும் என்று மக்கள் மன்றம் கூறுகிறது. அப்போதுதான் உண்மையான மக்கள் ஆட்சிமலரும் – அவர்களின் உள்ளத் துடிப்பையும், விருப்பங்களையும் அநுசரித்து அரசு இயங்க முடியும் என்று மக்கள் கருதுகின்றனர். ஆட்சி பீடத்தில் இருக்கும் பிரெஞ்சு ஆதிக்கக் காரர்களின் கண்களை ஆணவத் திரை மூடியுள்ளது. துப்பாக்கியின் துணைகொண்டு மக்களின் விருப்பங்களை அடக்கிவிட்.. ... என்றுலும் மக்கள் .. ..ரி மலையாகத்தான் ..ுகின்றனர்.

காமரூன் ம.. .. யூனியன் கட்சியினர் கூறும் குற்றச் சாட்டை மெய்ப்பிப்பதுபோல் அமாடொவ் அஹிஜோ, பிரெஞ்சு சர்க்காரிடம் சில நாட்களுக்குமுன் சில உடன்படிக்கைகள்செய்துள்ளார் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல்இச்சம்பவங்கள் அமைந்துள்ளன.

ஐ. நா. சபையின் பாதுகாப்பிலிருந்து விடுபட்டு தன்னிச்சையானநாடாககாமரூன்இன்றுமாறியுள்ளது. ஆனுலும்இன்னும்பழையபடி பிரான்ஸ்தான் அந்நியநாடுகளுக்கான தொடர்பில் பிரதிநிதித்வ படுத்த வேண்டும் என்பது, இரண்டு நாடுகளுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள உடன் படிக்கையில் ஒருஷரத்து. இதுபோல் எத்தனையோ தளைகளைப் பூட்டி பிரெஞ்சு நாட்டுடன் காமரூன் நாட்டு நலன்களை அமாடொவ் இணைத்துள்ளார். மக்கள் கட்சியினரை இச் சம்பவங்கள்தான் நடமாடும் எரிமலையாக மாற்றியுள்ளது.

காமரூன் நாட்டின் எதிர்காலத்தை மிக உன்னிப்பாக உலக நாடுகள் கவனித்துக் கொண்டுள்ளன. நிலையான அரசாங்கம் ஏற்பட்டால்தான் பின் தங்கிய நாடுகள் உருவான காரியங்களை நிறை வேற்ற முடியும். ஏற்கனவே பல வசதிக் குறைவுகள். அத்துடன் அமைதி நிலவாத அரசும் இணைத்து விட்டால் பின் தங்கிய மக்களின் வாழ்க்கையில் நிச்சயம் மறுமலர்ச்சிஏற்படாது. விடுதலை பெற்றுள்ள காமரூன் நாட்டுக்கு இதுவோர் சோதனைக் கட்டம். சுதந்திரத்தின் முழுப் பயனையும் காமரூன் மக்கள் அநுபவிக்க வேண்டுமானுல், கடும் பத்தியத்துடன் இதனைத் தாண்டியாக வேண்டும்–இதனைத் தவிரவேறு மார்க்கமே கிடையாது!

– கிருஷ்ணசாமி,
பி. ஏ. (ஆனர்ஸ்)

திருச்சி மாவட்ட
திராவிட மாணவர் முன்னேற்றக்கழக
முதல் மாநாடு
திருச்சி தேவர் மன்றத்தில் 26-1-60 செவ்வாய்
காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை
நடைபெறும்

தலைவர் :
திரு. உ. பில்லப்பன், எம். ஏ,,

திறப்பாளர் :
திரு. ப. நெடுமாறன், (பி. ஏ. ஆனர்ஸ்)

மாணவர்க்கழக பொதுச் செயலாளர்,
திரு. எஸ். டி. சோமசுந்தரம்,

மற்றும் ஆந்திரா, கன்னடம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து சில தோழர்களும் கலந்துகொள்வர்

அனைவரும் வாரீர்!   ஆதரவு தாரீர்!

எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.
வரவேற்புக் குழுத்தலைவர்;



மலர் 1] [இதழ் 51-52

தூத்துக்குடித் தேர்தல் !

ஜனவரித் திங்கள் இறுதி வாரத்தில் தூத்துக்குடி இடைத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது! அதனையொட்டி தமிழ்நாடு கம்யூனிஸ்ட்கட்சி செயற்குழு எடுத்திருக்கும்முடிவு மு[illegible]போக்கு எண்ணங்கொண்டோர் அனைவரையும் மகிழ்ச்சி கொ[illegible] செய்துள்ளது. ஆளும் கட்சியினர் இந்த நல்ல முடிவை எ[illegible]பார்த்திருக்க மாட்டார்கள்! எதிர்க்கட்சிகள் மத்தியில் நிலவும் சிறு சிறு வேறுபாடுகளை மிகைப் படுத்தி, இடை வெளியினை விரிவு படுத்தி, வெற்றிக் களிப்பில் ஈடுபடலாம் என்றுஎண்ணியிருந்த அவர்கள் கனவுநினைவாகவில்லை.

மும்முனைப் போட்டி ஏற்பட்டால் ஆளும் கட்சிக்குத் தான் வெற்றிகிட்டும் என்பது அனைவரின் ஒருமித்த முடிவு. கடந்த காலத்தில் நடந்த தேர்தலின் வெற்றி தோல்விகள் அதனைத்தான் சுட்டிக் காட்டுகின்றன! தனது கட்சியின் சொந்த பலத்தையும் செல்வாக்கையும் விட, எதிர்க் கட்சிகளின் பிளவேஅவர்களுக்கு சாதகமாக அமைந்திருக்கின்றது. நேரடிப் போட்டியிட்ட சிதம்பரம் போன்ற இடங்களில் ஆளும் கட்சியினர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றாலும் அதனை ஆழமாகப் பரிசீலனை செய்தால் உண்மைக் காரணம் புரியும்.

பொதுத் தேர்தலை விட இடைத் தேர்தல்கள் சில தனிக் காரணங்களினால் முக்கியத்துவம் பெற்று வி[illegible]ன்றன. இடைத் தேர்தலில் ஏற்படும் வெற்றி தோ[illegible]ள் அரசாங்கத்தை மாற்றும் வகையில் இல்லை. காரணம்வேண்டிய அளவு பெரும்பான்மை ஏற்கனவே பெற்றுள்ளார்கள். எதிர்க்கட்சிகளும் இடைத் தேர்தலில் ஆட்சி மன்றத்தினைக் கைப்பற்ற வேண்டும் என்ற குறிக் கோளுடன் அல்ல போட்டியிடுவது. இதனை போட்டியிடும் கட்சிகள் தெளிவாக நாட்டுக்கு உணர்த்தியுள்ளன.

இடைத் தேர்தலில் ஈடுபடும் போதுதான் ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சி பீடத்தில் ஏறிய பின்பு மக்களுக்குச் செய்த காரியங்களையும், தங்களின் கொள்கைத் திட்டங்களையும் கூறும் வாய்ப்பு ஏற்படுகிறது - எதிர்க் கட்சிகளுக்கும் இதுவோர் நல்ல வாய்ப்பு. ஆளும் கட்சியின் சந்தர்ப்பவாதக் கொள்கையினையும், அது நாட்டு மக்களுக்கு விளைவிக்கும் கேடுகளையும் உணர்த்த முடிகிறது. மக்களும் ஒருவாறு இரு சாரரின் வாதங்களையும் கேட்டு, நல்லதொரு முடிவுக்கு வர முடியும் - அந்த வகையில் தூத்துக்குடித் தேர்தல் மிக முக்கியமான தேர்தலாகும்.

மக்களின் அடிப்படை பிரச்சனையாகிய உணவுப் பிரச்சனை, சுதந்திரம் பெற்று பனிரெண்டு ஆண்டுகட்குப் பின்னும் முடிவடையாத ஒன்றாக உள்ளது. சென்ற சில திங்களில் உணவுப் பொருள்களின் விலைவாசிகள் விஷம்போல் ஏறி, நடுத்தர மக்களும், தொழிலாள சமுதாயமும் எழுத முடியாத அளவு தொல்லைகளை அனுபவித்து வருகிறது. இதனை நாடு நன்கறியும். சர்வகட்சி உணவுக் குறைப்பு இயக்கத்தின் கிளர்ச்சியினால் மக்கள் அதன் உண்மை நிலையினை ஓரளவு தெரிந்து செயலாற்றி வருகிறார்கள். எதிர்க்கட்சிகளின் நியாயமான கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் பரிசீலனை செய்து, தக்கன செய்து, பரிகாரம் தேடவில்லை; அதற்கு மாறாக பிரச்சினையைத் தள்ளிப்போடும் வகையில் அவர்களின் பேச்சுக்களும், விளக்கங்களும் அமைந்துள்ளன.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் அடுத்து எதிர்நோக்கியுள்ள பிரச்சனை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்திற்கு எவ்வளவு டில்லி ஒதுக்க இருக்கிறார்கள் என்பதாகும், சில தினங்களுக்கு முன்பு சென்னையில் கூடிய சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் பல்வேறு கட்சிகளும் பல அபிப்பிராயங்கள் கூறியிருக்கின்றன. திட்டத்திற்கு ஒதுக்க வேண்டிய தொகையில் அதிகம், குறைவு காணப்பட்டாலும, தென்னகம் தொழில் மற்ற துறைகளில் பின்தங்கியுள்ளது. கடந்த திட்டங்களிலும் அதற்குரிய தொகை செலவிடப்படவில்லை என்ற கருத்தில் எவரும் வேறுபடவில்லை, நிதிப் பிரச்சனைத்தான் ஆட்சியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்களே தவிர, எதிர்க்கட்சிகள் எடுத்துக்காட்டிய தேவைகளை மறுக்கமுடியவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளில் ஆளும்கட்சியின் கொள்கைகளையும, திட்டங்களையும் நாட்டுக்கு எடுத்துக்காட்டி மக்களை மேலும் தெளிவுபெறச் செய்ய நல்வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தேர்தலில் கழகம் ஈடுவது ஜனநாயகக் கடமை என்ற கருத்திலேயே தவிர, வெற்றி தோல்வி என்ற விளைவுகளை எண்ணியல்ல; இதனை நாடும், நாடாளும் நாயகர்களும் நன்கறிவார்கள். கழகத்திற்கு தேர்தலில் ஈடுபடும் இவ்வேளையில் தனது பலமும் தெரியும் - எதிர்த்துப் போட்டியிடும் ஆட்சியாளர்களின் பலமும் தெரியும். வெற்றி மட்டும் நமது குறிக்கோளல்ல, அதுதான் நமது இறுதிஇலட்சியம் என்றால், அதனைப் பெறுவதற்கு எவ்வளவோ குறுக்கு வழியுண்டு. அதனை நம்மால் மற்றவர்களை விட எளிதாகக் கையாளமுடியும். வெற்றியும் காண முடியும். கண நேரம் மகிழ்ச்சி அளிக்கும் அவ்வெற்றி விண்ணில் தோன்றி மறையும் வானவில் வண்ணம் போல் மறைந்து விடும். நிரந்தரமாக நிற்காது. குறு[illegible] வழியில் கிடைக்கும் வெற்றி எளிதாகக்கூட யிருக்கல[illegible] ஆனால் அதனைத் தொடரும் பழி ஊழிகாலமும் நம்மை[illegible] தொடர்ந்து அச்சுறுத்திக்கொண்டே இருக்கும். அஞ்சுவ[illegible] அஞ்சுதல் கழகத்தின் கொள்கை, எனவேதான் ஆளும் க[illegible]யினர் பழியினைக்கூடப் பாராமல் அக்கொடிய வழியில்துணி[illegible] செல்கின்றனர், அவர்களுக்கு ஒருவகையில் நஷ்டம்கூ[illegible] இல்லை. உதிரவிருக்கும் சருகுகள் அவர்கள். நாமோ பச்சை[illegible] பசும் தளிர். நாம் ஈடுபட்டிருக்கும் பணி விடுதலை என்ற ம[illegible]தான பணி! அவர்களுடையதோ குறுகிய கட்சி நல[illegible] எனவே அவர்கள் எளிதாக எடுக்கும் முடிவில் நாம் ஒன்[illegible] முடியவில்லை - ஒன்றவும் கூடாது.

தென்னகத்திலுள்ள குறிப்பிட்ட இரண்டு எதிர்[illegible] கட்சிகள் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் என்பதை எவரு[illegible] மறுக்க முடியாது. நடுத்தர வகுப்பினரின் மத்தியிலும பா[illegible]டாளி மக்களிடத்தும் நல்ல செல்வாக்குப்பெற்ற அமைப்[illegible]கள். அவைகளின் இன்றைய தேர்தல் கூட்டுறவு நல்ல[illegible]தொரு எதிர்காலத்திற்கு விடிவெள்ளியாக அமைந்துள்ளது[illegible] அடிப்படையில் இரண்டு கட்சிக்கொள்கைகளுக்கும் சிலசில வேறுபாடுகள் காணலாம்; அது தவிர்க்கமுடியாத ஒன்று. மக்கள் நலனில் ஒன்றுபட்டிருக்கும் தன்மையினால் வேறுபாடு கிடையாது, தொடர்ந்து இதுபோன்ற நிலை ஏற்பட்டால், காங்கிரஸ் சர்வாதிகாரப் போக்கிற்கும், எதேச்சைகாரத் தன்மைகளுக்கும் நிச்சயம் ஒரு முடிவுகாண முடியும். இதில் துளியும் சந்தேகமில்லை.

உணவு இயக்கம் இரண்டு கட்சிகளுக்கும் நல்லதோர் அநுபவம் - நமது ஒற்றுமை முயற்சியால் ஆட்சியாளர்களின் ஆணவப் பார்வையினைத் திருப்ப முடியும் என்று தெளிவாக உணர்த்தியது! இது தொடர்ந்து நீடிக்குமேயானால் நல்லதொரு எதிர்காலம் உண்டு. எண்ணியதை நிச்சயம் சாதிக்க முடியும்.

கடந்த பொதுத் தேர்தலிலும், அடுத்து நடந்த இடைத் தேர்தலிம் கழகம் போட்டியிட்டது. வெற்றிபெறும் வாய்ப்பைப் பெறவில்லை. காரணங்கள் பல உண்டு. பல காரணங்களில் மும்முனைப் போட்டியும் ஒன்றாகும் - காங்கிரசை எதிர்க்கும், ஜனவிரோதக்கொள்கையை எதிர்க்கும், வாக்குகள் பிளவு பட்டதும் ஒரு அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகும் அது இன்றைய தினம் தவிர்க்க பட்டுள்ளது, வெற்றிக்கு நல்ல தொரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

கடந்த இரண்டு தேர்தலில் கழக உறுப்பினராகப் போட்டியிட்ட தோழர் எம். எஸ். சிவசாமி அவர்களே போட்டியிடுகின்றார். தோல்வி என்றும் நம்மைத் துவளச் செய்ததில்லை - வெற்றி மாளிகையின் படிக்கட்டுக் களாகவே அவைகளைக் கருதுகிறோம். தோல்விகள் அனைத்தும் மனக் குலைவைத்தான் தரவேண்டும் என்பது என்ன நியதி! நாம் எடுத்துக் கொண்டிருக்கும் தூயபணி ஆயிரம் தோல்விகளையும் சமாளிக்கும் உள்ள உரத்தை, மனத்திண்மையையே அளிக்கிறது.

தூத்துக்குடித் துறைமுகம் சீர் பட்டால் தென்னகத்தின் வாணிபம் சிறக்கும். அன்னிய நாட்டுத் தொடர்பும் விரியும். இந்தக் கருத்தினைத் தொடர்ந்து சட்டமன்றத்தின் உள்ளும், நாடெங்கும், கழகம் தொடர்ந்து சொல்லி வருகிறது - இதனைத் தூத்துக்குடித் தொகுதி மக்கள் எவரையும்விட நன்றாகவே உணர்வார்கள் - கழகத்தின் கரம் பலப்பட்டால்தான் தென்னகத்தின் உரிமை முழக்கத்தை வேகமாக எழுப்ப முடியும். தூத்துக்குடித் தேர்தலின் விளைவுகள் இவைகளையெல்லாம் உண்டாக்கியுள்ளது. கழக அபேட்சகர்களின் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி என்பதனை உணர்ந்துதூத்துக்குடி வாக்காளர்கள் தங்கள் உரியகடமைகளைச் செய்ய பணிவுடன் வேண்டுகிறோம்.

கொங்குநாட்டு தீரன் சின்னமலை

K.A.மதியழகன்

கண்ணீரும் புன்னகையும்!

12

மூன்றும்நாளும் வள்ளிநாயகி மாமரச் சோலையிலே காத்திருந்தாள். அவன் வரவில்லை.

எத்தனைநாள்தான் சலிப்புடன் "நாளை இரவு இரண்டாம் சாமத்தில் மாமரச் சோலையில் சந்திக்கிறேன். உன் அத்தான்" என்ற ஓலையைப் படிப்பது?

நாலாம்நாள் இரவும் வந்தது. மீண்டும் ஓலையைப் படித்தாள். "நாளை இரவு...... என்று துவங்கிய வாசகங்களுக்கு புதிய பொருளைக் கண்டுபிடித்தாள். ஒருவேளை அத்தான் குறிப்பிட்டபடி வர இயலாமல் போனால் 'நாளை இரவு' என்று நம்பிக்கையிலே நான் மறுநாளும் காத்திருக்க வேண்டும் என்ற கருத்திலே எழுதியிருக்கலாம். இருந்தாலும் நான் அவசரக்காரி! போன இடத்தில் என்ன சிரமங்களோ! வேலை முடிந்திருந்தால் அப்படி என்ன பொழுது போக்கிக்கொண்டா இருப்பார்? எத்தனை காத தூரமானாலும் பறந்து வந்துவிட மாட்டாரா? நாளை படை மைசூர் கிளம்ப இருக்கிறது. இன்றுபகலே நம்முடைய வீரர்கள் அப்பாவிடம் விடை பெற்றுச் சென்றனர். எப்படியும் இன்று கட்டாயம் வருவார் என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டாள். இரண்டாம் சாமம் வந்ததும் அவளையறியாமலேயே கால்கள் மாமரச் சோலைப்பக்கம் நகர்ந்தன.

கொஞ்ச நேரம்தான் காத்திருந்தாள். ஏற்கெனவே அவள் உள்ளத்திலே ஏற்பட்டிருந்த ஏமாற்றத்தினுல் நெடுநேரம் ஆகிவிட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது. ஓலையை எடுத்து மீண்டும் படித்தாள்? எங்கே படித்தாள்? அதுதான் அவளுக்கு மனப்பாடமாய் இருந்ததே "நாளை இரவு" என்ற வார்த்தைகளை உச்சரித்தாள். "நாளை இரவு எப்படி சந்திக்க முடியும்? இனியும் நான் ஏமாற்றிக்கொள்ளப் போவதில்லை. நாளை இரவு மைசூர் மண்டிலத்தைச் சந்திப்பார்" என்று சொல்லிக் கொண்டே ஓலையை வெறி பிடித்தவள்போல் கசக்கி வேகமாக எறிந்தாள்.

கொஞ்ச தூரம் சென்று கீழே விழும். மீண்டும் எடுத்துக் கொள்ளலாம் என்ற கள்ள எண்ணம் அவளுக்கு இருந்தது.

அவள் கோபத்தில் எதிரே நடந்ததை கவனிக்க வில்லை. ஓலை கீழே விழவில்லை. வீசியெறிந்த ஓலையை பந்தைப் போல் பெரியதம்பி பிடித்தான்.

"என் மீது காட்டிட வேண்டிய கோபத்தை ஓலை மீது காட்டினுல் பாவம்! அந்த ஓலைஎன்ன செய்யும்? உனக்கு கொஞ்சமாவது நனறியிருந்ததா? இந்த நாலுநாளும் 'நாளை இரவு' "நாளை இரவு" என்று கூறி எவ்வளவு நம்பிக்கையூட்டும் நண்பனுய் இருந்தது. அதற்கு நீ செய்யும் உபகாரம்" என்று சொல்லி நிறுத்தினுன்.

பெரியதம்பியின் வேடிக்கையை அவள் ரசித்ததாக தெரியவில்லை.

அவன் மார்பின் மீது தலையை புதைத்துக் கொண்டு சிறு குழந்தைபோல் தேம்பித்தேம்பி அழுதாள்.

இந்த புதிய கட்டத்தை அவன் எதிர் பார்த்து வந்தவனல்ல. சமாளிக்கத் தெரியாது விழித்தான்.

"நான் அப்படித்தான் உங்களை வீசியெறிவேனுக்கும். நீங்கள்தான் என்னை வீசி யெறிந்து விட்டீர்க[illegible] இல்லா விட்டால் இவ்வளவு த[illegible] விட்டிருப்பீர்களா? இங்கேயே, கொங்கு நாட்டிலிந்தே உங்கள் வாக்குப்படி நடக்க முடியவில்லை. இனி மைசூர் மண்டிலமும் சென்று விட்டால் அவ்வளவுதான்! அய்யோ! பெண்ணுக பிறக்காமல் இருந்தாலே எவ்வளவோ நன்ருயிருந்திருக்கும்"

"ஏன் பெண்ணுகபிறக்காமல் இருந்தாலே நன்ருயிருந்திருக்கும். பிறந்தாலும் பெரிய தம்பியை சந்திக்காமல் இருந்தால் நன்ருய் இருந்திருக்கும். சந்தித்தாலும் அவன்மீது காதல் கொள்ளாமல் இருந்தால் நன்ருய் இருந்திருக்கும். காதல் கொண்டாலும் அவன் ஓர் போர் வீரனுய் இல்லாமல் இருந்தால் நன்ருய் இருந்திருக்கும். அதையும் சொல்லேன்!"

"நான் ஏன் அப்படிச் சொல்லப் போகிறேன். புற நானூறு படித்தவள். என் காதலர் போர் வீரர் எனபதிலே எனக்கு எவ்வளவோ இறுமாப்பு.

முதுகிலே காயம்பட்டு இறந்தான் தன் வயிற்றிலுதித்தமகன் என்று கேட்டபோது பதறி எழுந்து அப்படியாயின் அந்த பேடிக்கு பாலூட்டிய மார்பகத்தை அறுத்தெடுவேன் என்று களம் நோக்கி ஓடினுளாமே ஓர் தாய்.

முதல் நாள் அருமை அண்ணன் இறந்தான். இரண்டாம் நாள் ஆருயிர் மணுளன் இறந்தான். இருப்பினும் மூன்றும் நாள் போர்ப்பறை கேட்டவுடன் பாறு மயிர் குடுமி எண்ணெய் நீவி, தான் பெற்ற ஒரே மகனை செருமுகம் நோக்கிச் செல்க என அனுப்பினுளாமே வேளூர் அன்னை!

எதிரியின் அம்பால் [illegible] குற்ற வீரன் ஒருவ[illegible] மீது சாயப்போனுன் [illegible]டி வந்தாள் அவனது இ[illegible]ராணி. வெறி நிறைந்த காதலி அவள். தனது தலைவனை அணைய நிலமடந்தைக்கு இடம் கொடுக்கக் கூடாதாம்! தானே அணைத்துதாங்கினுள். நாதனின் ஆவி பிரிந்தது. அரைவிநாடி பொறுக்கவில்லை. தனது உயிரையும்விட்டாள், ஏனென்ருல் வீரனுகிய அவள் கணவனுடைய ஆவியுடன் தேவலோக மாதர்கள் கூடிவிடுவார்களாம்! அதற்காக அவனுக்கு முன்னே அவள் ஆவி இருக்க வேண்டுமாம்! என்னபொருமை அவளுக்கு! கலிங்கத்துப்பரணியிலே வரும் இந்தக் காட்சியின் பாடலாகிய:

தரைமகள் தன்கொழு நன்றன்
உடலந்தன்னைத்
தாங்காமல் தன்னுடலாற்றாங்கி
விண்ணுட்டு
அரமகளிர் அவ்வுயிரைப்
புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக்
காண்மின்! காண்மின்!

என்ற வரிகளை அப்பா அடிக்கடி சொல்லி ஆனந்தப்பட்டுக் கொள்வார்! மகளே! கவிஞனின் கற்பனை என்று கருதி விடாதே நீ பிறந்த தமிழகத்தின் தாய்க் குலத்தின் உள்ள நிலையின் படபிடிப்பு என்று விளக்கம் கூறுவார். இன்னுமொரு கருத்தையும் திரும்பத் திரும்ப வீரம்ததும்பச் சொல்லுவார். வெற்றியன்றி வேறெறியா வீரன் வீழ்ந்துவிட்டானும். காதலி தேடி வந்தாளாம். தலைமட்டும்தான் கிடைத்ததாம்! வீரக்கரங்களை காணவில்லை. வெற்றிவாளைக் காணவில்லை. குன்றுபோன்றதோளைக் காணவில்லை. குலவும் கோலமார்பைக் காணவில்லை. துடித்தாள். பித்து பிடித்தவள்போல் அரற்றினுள்.

பொருதடக்கை வாளெங்கே?
மணிமார்பெங்கே?
போர் முகத்தில் எவர்வரினும் புறங்
கொடாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே?
என்று கேட்பாளைக் காண்மின்!
காண்மின்!

என்று அப்பா கூறும் போது

ஆவேசம்பிடித்தவராக ஆகிவிடுவார்!

"அத்தான்! இத்தகு தங்கத் தாய்மார்கள் பிறந்த மண்ணிலே தான் இந்த வள்ளியும் தோன்றியிருக்கிருள். அவர்களது பாரம்பரியம் எனது இரத்தத்திலும் சிறிதாவது ஊறியிருக்காதா?" என்றுன்.

"வள்ளி! நான் என்னவோ நினைத்தேன்! போர்க்களத்துக்கே கிளம்பி விடுவாய் போலிருக்கிறது!"

"அத்தான்! உங்கள் அனுமதியிருந்தால் அங்கும் இந்த வள்ளி தொடருவாள்"

"நல்ல வேளை! கொங்குநாட்டில் குமரர்களுக்கு பஞ்சம்வந்து விடவில்லை. கோதையர் போரிட்டுநாட்டைக்காக்கவேண்டிய நிலை வந்து விடவில்லை"

"பார்த்தீர்களா! கோதையர்கள் என்ருல் ஒருபடி இறக்க [illegible]ாகத்தான் தெரிகிறது. ஆண் [illegible]த்திற்கு. அன்பே! ஆருயிரே! நீ [illegible] நான் வேறல்ல. நம் [illegible] தாழ்வு கிடையாது என்[illegible]ம் ஒப்புக்கு பெண்ணை மயக்க பேசுவர்! ஆனுல் தாங்கள்மட்டும் உயர்வு என்றஎண்ணம்இதயத்தின் அடிதளத்திலே பதுங்கி யிருக்கிறது. அவர்களையும் அறியாமல் காட்டிக்கொடுத்துவிடுகிறது" என்ருள் வள்ளிநாயகி.

"விவாதத்தில் இறங்க நேரமில்லை, கண்ணே! விடியப் போகிறது. எல்லா வீரர்களும் நேற்று மாலையே ஓடாநிலை வந்து சேர்ந்துவிட்டனர்.

வேடிக்கை ஒன்றுகேள்! நான் வரும் வழியில் உன் அப்பா அனுப்பிவைத்தநூற்றுவர்எதிரே போய்க்கொண்டிருந்தனர். தூரத்திலேயே கவனித்து விட்டேன். அவர்களைத்தாண்டி வர முடியாது. பக்கத்திலே யிருந்த ஒற்றையடிப்பாதையிலே குதிரையைத் திருப்பினேன். அவர்கள் மறையும்வரை புதரின்பின் புறம் ஒதுங்கி நின்றேன். உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. திருடன்போல் எனது மனநிலை இருந்தது! அவர்கள் ஏதோ பேசிச் சென்ருர்கள். என்னைத் தான் கண்டுகொண்டு குறும்பு பேசுவதாக எனக்குப் பட்டது"

"திருடர்தான்! அதிலே உங்களுக்கு சந்தேகம் வேறு? அர்த்தராத்திரியில் அன்னியரின் மாளிகையில் அனுமதியின்றி திருடர்கள்தான் நுழைவார்கள்! எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. இந்த திருட்டு வாழ்க்கைக்கு சீக்கிரம் முற்றுப்புள்ளி வையுங்கள்"

"கண்மணி! வாழ்வு ஓடை குறித்த கோட்டில் ஓடுவதில்லை. எதிர்பாராத நிலைமைகள் எதிர்பாராத விளைவுகளைத் தருகின்றன. ஆனுல் நாம் குறித்த படியே நடப்பதாக இருந்தால் மனிதசமுதாயமே கால அட்டவணைப்படி நடக்கும் இயந்திரக் கூட்டமாய் ஆகியிருப்பார்கள். பழனியில் கார்த்திகை தீபத்தின் போது நான் வந்தது வேறு வேலைக்குஎதிர்பாராமல் உன்னை சந்தித்தேன். அப்படி சந்திக்க விட்டால்......"

"போதும்! போதும்! போருக்குச் செல்ல வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. எதிர்பாராமல் வந்து விட்டது பொருத்திரு கண்ணே! விரைவில் வெற்றியோடு வருகிறேன்" என்று சமாதானப் படுத்த முயல்கிறீர்கள்!"

"என் வேலையைத் தான் குறைத்து விட்டாயே! தாய்க்குலத்தின் வீர தியாக குணத்தை மட்டும் சுட்டிக்காட்டினுய். ஆனுல் போர்க்களத்திலே வெற்றிமாலையுடன் வீடு திரும்பும் தலைவனை வரவேற்கக் காத்திருக்கும் வனிதாமணியின்பெருமிதத்தையும் நீ கற்றுத்தான் வைத்திருப்பாய்! காத்திரு என் கருத்திலமர்ந்தவளே! ஒரு ஆண்டு — அதாவது பனிரெண்டு திங்கள் ஒரே நொடியில் பறந்து விடும். நம் வாழ்வில் இருளே சூழாது. விடி வெள்ளியும் தோன்றிவிட்டது. விடியப்போகிறது. அவர்களெல்லாம் விழிப்பதற்கு முன்பு நான் சென்று ஆயத்தமாகவேண்டும். விடை கொடு கண்ணே!" என்றுன்.

இவ்வளவு நேரம் வீரமாக பேசினவள் மீண்டும் அவள் முகத்தை புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அடிபட்ட புருவை மெதுவாக தடவுவதுபோல அவளது கூந்தலை விரல்களால் மெல்வக் கோதினுன்.

வள்ளிநாயகியின் இதயபாரம் அவனுக்கு புரிந்தது. அவன் கரங்களில் இருசொட்டுக் கண்ணீர் பொல பொலவென உதிர்ந்தது, முந்தானையால் அவளது கன்னங்கள் வழிந்த விழி நீரைத் துடைத்தான்.

"போகும்போது புன்னகையுடன் வழியனுப்ப வேண்டும் கண்ணீர் கூடாது"

"சரி அத்தான்! சென்று வாருங்கள்" கண்ணீரும், புன்னகையும் ஒன்றையொன்று மருவி பெரியதம்பி கடமை உந்த அவளிடம் பிரியா விடைபெற்ருன். ஓடாநிலை எல்லைவந்து சேரும் போது விடிவதற்கு இரண்டு நாழிகைகள்தான் இருந்தன.

விரைவாக எழுந்து விட்டவன் போல் வீரர்கள் தங்கியிருந் ஓய்வுச்சாலைப்பக்கம்குதிரை ஓட்டினுன். பலர் அந்த நே திலே விழித்துக் கொண்டி தனர். சின்னமலை முந்தின நா இரவே உலகபுரத்திலிருந்து ம லாத்தாளிடமும் பழனியப்ப டம் கூறிவிட்டு வந்து சே தான். அவன் உடல் முழுத புதிய உற்சாகம பரவியிருந்தன சின்ன மலையின் கண்கள் ந பிக்கை ஒளியை உமிழ்ந்தன வீரர்களை யெல்லாம் பார் யிட்டான். மேலும் தெம்புபெ ருன்.

காலைமலர்ந்தது. நொய்யலாற் றில் நீராடி வீரரெல்லாம் சின்ன மலையின் உத்தரவுக்கு காத்திருந்தனர். பலர் குதிரைகளுடன் வந்திருந்தனர். வேறு பலரிடம் பளபளக்கும் வாட்கள் இருந்தன. இன்னும் சிலர் தடிக்காரர்கள் என்பதைக் காட்டிக் கொண்டனர்.

அவர்களெல்லாம் திரண்டவுடன் அரசமரத்தின் மேடை மீது சின்னமலை ஏறினுன். பேச ஆரம்பித்தான்.

"வீரர்களே! கொங்கு நாட்டின் இளங் கொழுந்துகளே! உங்கள் எல்லோரையும் வருக, வருக என வரவேற்கிறேன். உங்கள் வருகையால் நான் இன்றுப் புதிய மனிதனுக ஆகிஉள்ளேன். உங்களை எதற்காக அழைத்தேன் என்பதைத் தெரிந்தே வந்துள்ளீர்கள்.

உங்களை பொன்னும் மணியும் நவநதியும் உள்ள மாநகரங்களுக்கு நான் அழைத்துச்செல்லவில்லை.

இந்தக் கருவூலம் இனி உங்கள்உடமைஎன்றுசொல்லத்தக்க கொள்ளைத் திட்டத்திற்கல்ல பொன்னும் பொருளும் வேண்டியவர் என்னை பின் தொடராதீர்கள். தாயகத்தின் மானம் பறிபோகிறது நம் தன்னுரிமை மிதித்துதுவைக்கப் படுகிறது. தபயகத்தின் மீது பற்றுள்ளவர் அதன் விடுதலை அக்கரை கொண்டவர்மட்டும் இந்த அணியில் இருக்கலாம்.

மரணப் பள்ளத்தாக்கிற்கு அழைக்கிறேன். இரத்தத் தடாகத்தில் நீந்த வேண்டிவரும். பிணமலைகளுக்கு மத்தியில் உலவ வேண்டும். ஆசைமனைவியை அருமைப் பெற்றேரை சில நாட்கள் மறந்திருக்கும் ஆற்றலாளர் எனக்குத் தேவை. அந்த நெஞ்சுறுதி இல்லாதவர் ஊர் திரும்பலாம். உவகையுடன் அனுப்பிவைக்கிறேன்' என்றுன்.

[தொடரும்]

மாலைக்காற்று – மண்டிவந்து கொல்லுதடி!

"புதுமதியன்"

கடலோரம் எழில்செய்யும் கழியில் பூக்கள்
கண்மூடும் மாலையிலே, கொண்டற் காற்றே
உடல்நீவிக் கொல்லுதடி தோழீ! என்றன்
உளம்பற்றிப் போனவரோ வாரார்; தாழை
மடல்மீது நாரையினம் போயொ டுங்கும்
வளநாடன் பொன்மார்பு தழுவச் சென்ற
மடநெஞ்சம் அவர்பாலன் பில்லை யென்று
மறித்திங்கு வாராதங் கிருப்பின் நன்று!

நீலநிறக் கடல்பொங்கி அலையெழுப்பி
நின்ருலிக்கும் மாலையிலே, கொண்டற் [காற்றே
ஆலமெனப் பாயுதடி தோழீ! என்றன்
அகம்பற்றிப் போனவரோ வாரார்; பெண்ணை
மேலமரும் ஈரன்றில் ஒன்றிக்கூடும்
விரிநாடன் மணிமார்பு தோயச் சென்ற
கோலமனம் அவர்பாலன் பில்லை யென்று
குணமா[illegible]ராதங் கிருப்பின் நன்று!

மீனுண்ட சிச்சிலியோ புன்னைக் கூட்டில்
மேவுகின்ற மாலையிலே, கொண்டற் காற்றே
ஈனமுறக் கொல்லுதடி தோ[illegible]! என்றன்
இதயத்தைக்கொண்டவரோ வாரார்; செய்யில்
ஏனற்ருள் கால்நாரை பறைகண் டஞ்சும்
எழில்நாடன் விரிமார்பு துயிலச் சென்ற
ஊனமனம் அவர்பாலன் பில்லை யென்றே
உடனிங்கு வாராதங் கிருப்பின் நன்று!

வண்டினங்கள் பூத்தேனை உண்டெழும்பி
வளம்பாடும் மாலையிலே கொண்டற்காற்றே
மண்டிவந்து கொல்லுதடி தோழீ! என்றன்
மனம் வாங்கிப் போனவரோ வாரார்! மக்கள்
கொண்டவிழா வொலிபோலப் புள்ளொலிக்கும்
குணநாடன் நன்மார்பு மேவச் சென்றே
அண்டியநெஞ்(சு) அவர்பாலன் பில்லையென்றே
அவர்விட்டு வாராதங கிருப்பின் நன்று!

புள்ளினங்கள் துணையோடு கூட்டை நோக்கிப்
போகின்ற மாலையிலே கொண்டற் காற்றே
உள்ளமின்றிக் கொல்லுதடி தோழீ! என்றன்
உயிர்நெஞ்சங் கொண்டவரோ வாரார்;
[வெண்ணெல்
கொள்ளுபவர் வயலிடையே பறைமுழக்கம்
குளிர்நாடன் தடமார்பு தோயச்சென்ற
கள்ளமனம் அவர்பாலன் பில்லையென்றே
கடிந்தபடி வாராதங்கிருப்பின் நன்று!

தாழைமடல் வெண்மைநிறப் பூமணத்தைத்
தவழவிடும் மாலையிலே கொண்டற் காற்றே
தோளடுத்துக் கொல்லுதடி தோழீ! என்றன்
தூயமனங் கொண்டவரோ வாரார்; நாரை
கோழைமனத் தாலஞ்சிக் கொம்பொ லித்தல்
போற்கூவும் நாடன் மார்(பு) எய்தச்சென்ற
ஏழைமனம் அவர்பாலன் பில்லையென்றே
ஏங்கிப்பின் வாராதங்கிருப்பின நன்று!

வாழ்க காதற் சுவடுகள்!

அயிந்தன்

இருவர்! அவர்கள் உள்ளத்தே இன்பம் நிறைந்து வழிகிறது! அது அவர்கள் முகத்திலே தோன்றுகின்ற ஒளியால் தெரிகிறது. அவன் முன்னே செல்கிறான். அவள் பின்னே செல்லுகிறாள். ஒளி மணற்பரப்பிலே நடந்து செல்கின்றனர். அம் மணற் பரப்பிலே பருக்கைக் கற்கள் இடையிடையே காய்ந்து உலர்ந்த முட்கள். ஓர் புறத்தே கள்ளியும், முள்ளும், கானகம் தொலைவில்தோன்றுவதும் தெரிகிறது. அங்கு கொடிய விலங்கினங்கள் இருக்குமே என்ற அச்சம் அவர்கள் மனதிலே இல்லாமலில்லை! இருப்பினும் அவர் ர் இன்பப் பயணம் மேற்கொண்டு விட்டனர். சுரவழிக் கொடுமையை அவன் மறந்தான் முன்னே சுடர்கொடி வருவதால். முள்ளும் கல்லும் மெல்லடியை வருத்தமுறச் செய்வதையும் அவள் பொருட்படுத்தவில்லை; முன்னே தன் 'முதல்வன்' செல்வதால். மெல்ல மெல்ல நடந்து செல்கின்றனர்.

முன்னே செல்லும் அவன் மெல்லத் திரும்பிப் பார்க்கிறான். அப்பார்வை, 'துன்பமாக இருக்கிறதா' என்று கேட்கிறது! கைக்கிறாள் அவள். அவள் இதழோரம் மின்னும் புன்னகை 'இல்லை' என்று மறுமொழி கூறுகிறது, நடந்து கொண்டே இருக்கின்றனர். அவன் வைத்த அடிச்சுவட்டின்மேல் இவள், 'இட்ட அடிநோக எடுத்த அடி கொப்பளிக்க' நடந்து செல்கிறாள். ஆனால் மனம்மட்டும் எதனையோ சிந்தித்துச் சுழன்று கொண்டிருக்கிறது.

அவள் மனம்!

"பொற்கொடியாய், நீயும் என்னோடு வரத் துணிந்தனையோ? இவ் வருஞ் சுரத்திற்கு ஆற்றாது நின் பஞ்சின் மெல்லடி! சேலன்ன விழியாளே வேலன்ன கூர்ங்கல்லால் அனிச்ச மலர்க்காலெல்லாம் வருந்தும்! வஞ்சி! இப் பாழும்மணல்வெளி நஞ்சோ தீயோ வறியேன். பஞ்சோ பனி மலரோ என்னும் நின் பொன்னடி வருந்த என் நெஞ்சோ பொறும்? கல்லும், முள்ளும் பட்டால் நின் சீரடித் தாமரை கன்றிச் சிவந்து செவ்வரக்குத் தோய்ந்தது போலாகி விடுமல்லவா?" என்று தலைவன் 'உடன்போக்கு' மறுத்தான். அவன் வாய்மலர்ந்தருளியசொல் புனைந்த அன்பு மொழி அவளுக்குத் தேனாயிற்று. ஆதலின் கானானென்ன கடுஞ்சுரமானால் என்ன, அவன்மேல் மால் ஆன நெஞ்சம் மகிழ்ந்து உடன்போகத் துணிந்தது.

எல்வளை எம்மோடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீரடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத் தோய்ந்த
வைபோலக்
கல்லுறி னல்வடி கறுகுந வல்லவோ

என அவன் கூறிய மொழி அவளுக்குத் தேனாயிற்று. அதனை எண்ணி எண்ணிமகிழ்ந்து செல்கிறாள்.

அவன் மனம்!

செல்வழித் துன்பத்தை எடுத்துரைத்தும், "சூழும் அத் துன்பம் எனக்கு இன்பம்" என்னல்லவா கூறினாள்.

அன்பறச் சூழாதே யாற்றிடை நும்
மொடு
துன்பந் துணையாக நாடின துவல்[illegible]
தின்பமு முண்டோ வெம்க்கு

என்று அவள் தன்னையும் உடன் அழைத்துப் போகும்படியல்லவா கூறினாள், என்று நினைத்து நெஞ்சு நிறை மகிழ்வோடு செல்கிறான்.

பயணம் தொடர்கிறது. மெல்லத் திரும்பிப் பார்க்கிறான். "அன்பே! மெல்ல! மெல்ல!" அவன் இதழ் அடிக்கடி உதிர்க்கும் சொல். ஆயினும் அவன் மனம் எதனையோ சுற்றி சுற்றி வலம் வந்தது. இடையே சிரித்தான்; மகிழ்ந்தான். பாங்கி இருவரையும் ஒன்றுபடுத்தி வழியனுப்பி வைக்கும் பொழுது. தலைவ நீ "இவளை உன்னுடைய ஊருக்கு அழைத்துச் செல்வதை விடவேறு வழியொன்றுமில்லை" என்றாள்.

"அண்ணாந்து உயர்ந்த அழகிய கொங்கைகள் தளர்ந்தாலும் பொன்போன்ற மேனியிலே கருமணிபோன்ற தாழ்ந்த நெடிய கூந்தல் நரையுடனே முடிக்கப் பெற்றாலும், அக்காலத்து இவள் நம் முயக்கத்திற்குப் பயன்படாது

யாழிலே பிறந்த இசை! மலையுளேபிறந்தசாந்தம்!

முதிர்ந்துள்ளாள் என்று கை விடாதே கொள்; பாதுகாப்பாயாக"

'அண்ணா[illegible]ந்திய வனமுலை
தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு
முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ழூர'

என, தலைவனின்பொறுப்பினைக் கூறினாள். "பாங்கியின் நெஞ்சம் வாழ்க! எத்தகு பொறுப்பிருந்தால் இத்தகு மொழி கூறியிருப்பாள்" என்று எண்ணி இறும்பூதெய்திய வண்ணம் செல்கிறான். பின் தொடர்ந்துவரும் அவளை மீண்டும் திரும்பிப் பார்க்கிறான். "எம்மூர் நெருங்கி விட்டது; வருந்தற்க" என்கிறான். உலகையே மறந்து, உள்ளத்திலே இன்பம் பொங்க இருவரும் செல்கின்றனர்.

'நாலடி வள்ளுவராகும்!'

இவர்களைத் தேடிக்கொண்டு செல்கிறாள் செவிலித்தாய். 'உடன்போக்கு' கொண்டதலைவியைப் பெற்ற தாய் மகளைப் பிரிந்தறியாதவள். "அத்தாய் மிகுதுயர் அடையச் செய்துவிட்டன்றோ சென்றுவிட்டாள்" என எண்ணியவாறு செல்கிறாள். யாரைப்பார்ப்பது? யாரைக்கேட்பது? தோற்றவில்லை அவளுக்கு செல்கிறாள்; சென்றுக்கொண்டிருக்கிறாள். அவர்கள் சென்ற அறிகுறி யாதேனும் தெரிகிறதா என்று ஆராய்கிறாள்; ஒளிமிக்க மணல் வெளிக்குவந்துவிட்டாள். அங்கு அவர்கள் சென்றதன் அறிகுறி தென்படுகிறது! மணலிலே அடிச்சுவடுகள் பதிந்திருப்பதைக்கண்டு கொண்டாள்.

சென்றது இருவர். தெரிவது இரண்டு அடிச்சுவடுகள் மட்டுமே! அந்தச் சுவடும் பெரியதாகத் தெரிகிறது. இது அவன் காற்சுவடு போலத்தான் தெரிகிறது! ஆனால் அதனைத் தொடர்ந்து சிறிய சுவடுகள் தெரிந்தாலல்லவா "அவர்கள் தான்" என்பதைஉறுதி செய்ய முடியும். மெல்லக் கூர்ந்து கவனித்தாள். அந்தப் பெரிய சுவடுகளுக்குள் சிறிய சுவடுகள் பதிந்திருப்பவை தெளிவாகிறது! அவர்களேதான் எனத் துணிவு கொள்கிறாள்! வியப்புறுகிறாள்!

ஆராய்ச்சி வளர்கிறது. கல்லும், முள்ளும் இல்லாத இடம் பார்த்து அடிவைத்துச் சென்றிருக்கிறான் தலைவன். அப்படி அக் கள்வன் மகன் அடிவைத்[illegible] நடந்து வழிகாட்ட, [illegible] அடிச்சுவட்டின்மே[illegible]காற் சுவடு பொருந்[illegible]ன்றோ சென்றிருக்கிறாள்!

இவை — ஒள்ளிய வலியபடை போலும் கண்ணினையுடையாளுடைய சிறிய அடிச் சுவடாம், அவை — பகடுபோலும் வலிமையுளையானுடைய அடிச்சுவடென்றுய்த் துணர்ந்தேன்; என மொழிகிறாள்.

ஒள்வன் படைக் கண்ணு சீறடியிங்
கிவை யுங்குவை யக்
கள்வன் பகட்டுர வோனடி யென்று
கருதுவனே
(சுவடு கண்டறிதல்,
- திருக்கோவையார்)

* * *

சுவடு கண்டு அறிந்து கொண்டாள். "ஐயகோ! இந்த விடலையின் பின்னே வேலொத்த வெம்பரல் கொண்ட இக் கானகத்தில் செல்ல இவள் கான் மலர் எப்படி ஒத்துக் கொண்டனவோ! வண்ணச் சீறடி எப்படி வருந்தியதோ! பொன்மலர் மேனி எப்படி வாடியதோ! எனவருந்துகிறாள், இரக்கங் கொள்கிறாள்.

வேலொத்த வெம்பரற் கானத்தி
னின்றோர் விடலைபின் போங்
காலொத்தன வினையேன் பெற்ற
மாணிழை கான்மலரே
(சுவடு கண்டிரங்கல்,
- திருக்கோவையார்)

தலைவன் காட்டிய வழியின் கண்ணே நடப்பாள், வாழ்வியலிலும் அவன் காட்டும் வழிச் செல்வாளன்றோ! உடல் இரண்டு! உயிர் ஒன்று! இது அகத்தால் ஒன்றுபட்டது. அகத்தால் மட்டுமே ஒன்றுபட்டார்களில்லை, புறத்தாலும் ஒன்றுபட்டார்கள்! எப்படி? அவன் அடிச்சுவடு இரண்டு — அவள் அடிச்சுவடு இரண்டு: ஆக 'நாலடி' ஆகிறது. ஆனால் அவள் அடிச்சுவட்டிற்குள் அவள் வைத்த அடிச்சுவடும் அடங்கிவிட்டது. ஆக

புத்தாண்டு பரிசு புதுமை விருந்து

திராவிடன் பொங்கல் மலர்

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்,
மற்றும் கழக முன்னணி வீரர்கள். கலைஞர்கள்,
பேராசிரியர்களின் எழுத்தோவியங்களோடும்,
ஓவியநிபுனர்கள் பாலுசகோதரர்கள்அளிக்கும் மூவண்ண முகப்பும்,
டாக்டர் மு. வ. அவர்கள்"தாய்ப்பால்" என்னும்கருத்தோவியமும்,
என். வி. என். அளிக்கும் இயக்கத்தின் முக்கிய சம்பவங்களும்,
இளஞ்சேரனின் "எமிலி ஜோலா" நாடகவிருந்தும்,
மேல்நாட்டு உடையில் அண்ணாவின் முழுத்தோற்றமுள்ள
புதுமுறை எழிற் படமும்
சிந்தையள்ளும் சித்திரத் தலைப்புகளும்
இன்னும் எல்லா சிறப்புகளையும் தாங்கி வெளிவரும்

விலை ரூ. 1-8-0 தான்

உங்கள் பிரதிகளுக்கு
உடனே பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்

விபரங்கட்கு : தொலைபேசி எண் : 62679

"திராவிடன்"
சென்னை-11.

நாலடி, ஈரடியாகிவிட்டது. ஈரடி ஓர் வழியாகி, புறத்தாலும் அவர்கள் ஒன்ருயினர். இதனை ஓர் புலவர் "நாலடி வள்ளுவராகும் இப்பாரில்" எனக் கூறினர்.

நாலடி — நான்கு அடிகள்,
வள்ளுவராகும் — இரண்டடிகளாகும் (இரண்டு அடிகளைக் கொண்டது திருக்குறள்)

* * *

செவிலித்தாயின் பயணம் தொடர்கிறது. வழியிலே செந்தண்மை பூண்டொழுகும் அ[illegible]தணரைக் காண்கிருள்.

"ஐயன்மீர்! இக் கானட்டிடை என் மகளொருத்தியும் பிறண்மகனொருவனும் பிறரறியாமலே, தங்களிலே கூடி மனமொத்துச் சென்றனர். அவர்களைக் கண்டீரா[illegible] என்று கேட்கிருள். எதிர்ப்பட்ட துறவி, அவள் உள்ளக் கிடக்கையை அறிந்துகொள்கிருர், "மகளே! காணுமலில்லை கண்டோம்" என மறுமொழி [illegible]றுகிருர். அவள் புடுகின்ற துயர் தெரிகிறது. ஆயினும் அவளைத் [illegible]ன் வேண்டி சில அறிவுரைகள் [illegible]கிருர். அவளுக்கும் அது 'புரியாமற் போகவில்லை' மனம் ஆற்ருமல், பிரிவுத் துயர் தாளாத் தாய் மனம் வருந்துமே என்ற எண்ணத்தில் செல்கிருள். எனினும் அவ் வந்தணளர் மொழி சற்று ஆறுதல் அளிக்கிறது. "எழில்மிக்க அணங்கு, நலம்மிக்க நம்பியுடன் செல்கிருள். இது அறநெறியே! பொடிசுடும் இவ்வரிய சுரத்தின் கண்ணே செல்கின்ற நங்கைக்கு தாயாந்தன்மையுடையீர்போலும் என்று தன் அறிவுரைதொடங்குகிருர்.

மலையுளே பிறந்த சாந்தம்!

நறுமணப் பொருளாகிய சந்தனம் மலையிலே விளைகிறது. ஆனுல் மலைக்கு அச் சந்தனத்தால் என்ன பயன்கிடைக்கிறது. அதனைக் கொணர்ந்து, அரைத்துப் பூசுவோர்க்கே பயனும் இன்பமும் கிடைக்கின்றன. அது போல நும்மகளும் பயன்படும் பருவத்து நுமக்குப் பயன்படாள்.

கடலிலே பிறந்த முத்து!

அலை கடலுக்கடியிலே பிறந்த ஒளிமிக்க வெண்முத்துக்களால் அக்கடலுக்கு ஏதாவது பயன் உண்டா. இல்லையே! ஆரமாக்கியும். தொங்கல் புனைந்தும் அவற்றை அணிவோர்க்கல்லவோ பயன்படும். அது போலவே பயன்படும் பருவத்து நும்மகள் நுமக்குப்பயன்படாள்.

யாழிலே பிறந்த இசை!

இசை யாழிடத்தே தோன்றுகிறது. அவ்விசையால் யாழுக்கு என்ன பயன்? யாழினை முறையாய் மீட்டி வருகிஅற இசையைத் துய்ப்பவனுக்குத்தானே பயன்படுகிறது. நும் மகளும் பருவத்து நுமக்குப் பயன்படாள்.

என்ற மூதறிஞர், அவர்களுக்குத் துன்பம் செய்யாதிர், சிறந்தானை எண்ணி வழிபடச் சென்றனள். இதுவே தலையாய அறம், என்று ஆறுதல் மொழி கூ[illegible]ர்.

செவிலியின் மனம்!

அவ்வந்தணளர் கூறிய செவ்வியமொழி, அவளுக்கு ஆறுதல் அளித்தது. அவர் பொன்மொழிகள் சரியென்று பட்டன. என்றைக்கிருந்தாலும் அவள் கணவன்வீடு செல்ல வேண்டியவள் தானே!

இல்லற வாழ்வெனும் இன்பக்கடலிலே ஒளிமுத்தாய்த் தோன்றினுள். அம் முத்தனையாள் அக் காளையின் முத்தாரமானுள்! வாழ்வென்னும்இனிய சோலையிலேசந்தனமாய்த்தோன்றினுள். அம் மணிமார்பன் அகலத்திற்கு குளிர்தரும்பூச்சானுள். வாழ்வென்னும் இன்ப யாழிலே அன்பு எனும் நரம்பு தடவக் கிளர்ந்தெழுந்த இசையானுள். அவ்விசை துய்ந்து இன்பமடையும் அவளுக்கு 'இசையமுது' ஆனுள். வாழ்க அவர்கள்! வாழ்க காதற் சுவடு! எனஅவள் நெஞ்சம் தனக்குள்ளே கூறிக் கொண்டது. இனி அவர்களை ஏன் தேடவேண்டும். அவள் மனத்திலே 'அழியாத சுவடு' பொறித்துச் சென்றுவிட்டனர் அவர்கள்.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென் செய்யும்
நினையுங்கால் நுமக்குமாங் கனையளே
சீர்கெழு வெண்முந்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க் கவைதா மென் செய்யும்
தேருங்கால் தும்மகள் நுமக்குமாம் கனையளே.
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க் கவைதா மென் செய்யும்
சூழுங்கால் நும்மக்கள் நுமக்குமாங் கனையாளே"

மயில் கழுத்து!

நிலைமைக்கேற்ற நடவடிக்கைகள் எடுப்பதில் ஆங்கிலேயர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். வரும் முன் காக்கும் தனிக்குணம் அவர்களின் தனிச்சொத்து. மயில் கழுத்தின் வண்ணத்தை அறுதியிட்டுக் கூற முடியாதாம். அதுபோலத்தான் ஆங்கிலேயர்களின் சுபாவத்தையும் அறுதியிட்டுக் கூறமுடியாது. சமயத்திற்கு ஏற்ற செயல்களைச்செய்து தங்களின் நிலையை, ஆதிக்கத்தைக் காப்பாற்றிக்கொள்வர்.

சில திங்களுக்கு முன் இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியினர் தான் பெருவாரியாக வெற்றி பெறுவர், ஆளும் கட்சியாக மாறும் என்று உலகில் பெரும் பகுதியினர் கணக்கிட்டனர். [illegible]ல் அது நடைபெறவில்லை. கன்சர்வேடிவ் க[illegible]யினரே மீண்டும் வெற்றிபெற்றனர். காரணம் என்ன? ஆங்கிலேயர்கள் ஒரு விசித்திரமான சமுதாயத்தினர். நடைமுறைகளைக் கணக்கிலெடுத்து, நல்ல முடிவுகளை எடுக்கும் வல்லமை மிக்கஇனம். பயன் கிடைக்காவிட்டாலும், பாதகமாவது உண்டாகாமல் இருக்க வேண்டும் – இது அவர்களின் முடிவு. தொழிற் கட்சியினரின்நுழைவு பயன் அளிக்காவிட்டாலும், மேலும் பல புதிய கொள்கைகளினுல் சிக்கல் பலவற்றை உண்டாக்கிவிடும் என்று கருதினர். இன்றைய நிலையில் இருப்பதை அழிக்காமல் காப்பாற்றும் ஒரு கட்சியே தேவை என்ற எண்ணத்தின்படி, கன்சர்வேடிவ் கட்சியினையே ஆதரித்தனர். வெற்றிபெறச் செய்து ஆளும் கட்சியாக மாற்றினர்.

பிரிட்டிஷ் பிரதமர் மேக்மில்லனும் அவர் சார்ந்துள்ள கன்சர்வேடிவ் கட்சியும் பிரிட்டிஷ் மக்களின் எண்ணத்தைப் பொய்ப்பிக்காத வகையில் செயலாற்றி வருகிருர்கள். சில நாட்களுக்கு முன்புவரை தங்களின் காலனி நாடாக இருந்தவைகளைஎல்லாம் கூட காமன்வெல்த் கூட்டில் அங்கமாக்கும் வகையில் அவர்களின் பங்கு அமைந்துள்ளது. ஆதிக்கக்காரர்களின் மீது காழ்ப்பும் வெறுப்பும் உருவாவதுதான் மனித இயல்பு. ஆனுல் அதற்கு மாருன நிலையை ஆங்கிலேயர்க்ளின் உறவில் இன்றையதினம் காண்கின்ருேம். ஆங்கிலேயர்களின் விட்டுக்கொடுக்கும் சுபாவமும், காலத்தை ஒட்டி, செயல் முறைகளின் தன்மைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும்தான் இதற்குக் காரணம் என்று யூகிக்க வேண்டியுள்ளது.

தங்களின் பிடியிலிருந்து காலனி நாடுகள் நீங்கினுலும், அவைகளிடையே தொடர்பையும், பிடிப்பையும் வைத்துக் கொள்ள 'காமன்வெல்த்' போன்ற அமைப்புக்களை உருவாக்கி வைத்துள்ளனர். மூல நோக்கம் என்றும் நிறைவேறும் வகையில் அவர்களின் செயல்களும் திட்டங்களும் அமைந்துள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் பிரதமர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது முதல், மற்ற நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு பலவகையிலும் செயலாற்றியுள்ளார். பல நாடுகளுக்கும் நல்லுறவு யாத்திரை செய்து நெருங்கியநண்பர்களாக மாறும் வகையில் பணியாற்றியுள்ளார். முதலமைச்சராக மாறியவுடனேயே பெருடா என்ற இடத்தில் அமெரிக்க ஜனுதிபதி ஐசன் ஹோவரைச் சந்தித்து இரு நாடுகளிடையேயும் உள்ள நட்புறவை பலப்படுத்திக்கொண்டார். இதனை அடுத்து மூன்ருவது திங்களில் இலண்டனில் காமன் வெல்த் பிரதமர்கள் மாநாடு நடைபெற்றது. அதற்குத் தலைமை வகித்தார். 1958—ம் ஆண்டில் பிரதமர் என்ற பொறுப்பில் இந்தியா, பாகிஸ்தான், சிலோன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற காமன்வெல்த் நாடுகளுக்கு சென்ற சுற்றுப் பயணம் மிக முக்கியமான நிகழ்ச்சிகளாகும். அச்சமும் அவநம்பிக்கையும் மற்[illegible] நாடுகள் கொள்ளாத வகையி[illegible] தொடர்புகளை நீடிக்கச்செய்த[illegible] "அறிக்கைகளோ, மற்ற நட[illegible]டிக்கைகளோ ஒரு நாட்டி[illegible] உண்மை நிலைகளைக் காட்[illegible] நல்ல சாதனங்கள் அல்ல—நே[illegible] சென்று கண்டு உண்மை நி[illegible]களைக் கண்டு அறிவதுபோ[illegible] அவ்வளவு பயன் தராது என்[illegible] எண்ணத்தில் ஆங்கில சர்[illegible]காருக்கு ஆழ்ந்த நம்பிக்[illegible]யுண்டு"— என்று மேக் மில்ல[illegible] ஒரு முறை குறிப்பிட்டார்.

வருகின்ற பத்து ஆண்டுகளி[illegible] அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்று சுதந்திர நிலை பெற்றிருக்கும் ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தும் உலக அரசியலில் மிக மகத்தான பங்கினை வகிக்க இருக்கிறது என்ற கருத்தினை உலக அரசியல் வாதிகள் அனைவரும் வலியுறுத்தி வருகின்றனர். இதனைச் சாதகமாக்கும் வகையில் பிரிட்டனின் திட்டடம் இன்று அமைந்துள்ளது.

கடந்த மூனறு ஆண்டு பதவிக் காலத்தில் பிரிட்டிஷ் பிரதமர் மேக் மில்லன் உலகில் 93.000 மைல்கள் சுற்றுப்பயணம்செய்து பல்வேறு நாடுகளிலும் நல்லுறவைப் பெற்றுள்ளார். தான் பெற்ற அநுபவங்களைப் பின்னணியாகக் கொண்டு விடுதலை பெற்று சுதந்திர நாடுகளாகத் திகழும் ஆப்பிரிக்கா நாடுகளுடன் நல்லுறவைஉண்டாக்க ஜனவரித் திங்கள் 5–ம் நாள் பயணம் செய்துள்ளார். கால மாறுதல்கள் எப்படி இருந்தாலும், மூல நோக்கம் சிதையாமல், காப்பாற்றுவதில் அவர்களுக்கிணை அவர்கள்தான்!

அடுத்த இதழ்!

பொங்கல் சிறப்பு இதழ்

தோழர்கள்: ப. வாணன்,
முல்லை சத்தி,
எஸ். எஸ். தென்னரசு,
கே. இராசாராம். பி. ஏ.
சித்தார்த்தன், பி. ஏ.
அமிந்தன்
ஆசிரியர் கே. ஏ. மதியழகன்

ஆகியோர் தீட்டும் எழுத்தோவியங்கள் இடம்பெறும்!

தொடர்ந்து பனிரெண்டு பக்கங்களுடன் உங்களை மகிழ்விக்க வெளிவரும்

கனம். மடாலய மந்திரியின் வக்காலத்து!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வத்சலம் கொஞ்சம்கூடச் சிலமில்லாமல் தெரிவிக்கிருர். சம்பிரதாயத்திற்குப் பரிந்து பேசும் மீஞ்சூர் மிராசுதார் முதலில் மட ஆலயப் பொறுப் பைஒரு பார்ப்பனரிடம் ஒப் டைக்கவேண்டும். இவர் அந்தப் பொறுப்பில் இருப் த சம்பிரதாயத்திற்கு ணபட்டது. மேலும், இது பிரதாயம், அது சம்பிரதா ' என்று சொல்லிக்கொண் ருப்பதற்கு ஒரு அமைச்சர் வையில்லை. திண்ணையில் ங்கிக் கொண்டிருக்கும் ஒரு ண்டி வாத்தியாரே அந் பதவிக்குப் போதுமான ! ஒரு இலாகாவில்காணப் ம் குறைகளைத் திர்ப்பதற் தான்அமைச்சர்களேதவிர ப்படும் குறைகளை அடித் பேசி மற்றவர்களைப் பைத் பக்காரர்களாக ஆக்குவதற் ல்ல! இது அதற்கேற்ற லமுமல்ல!

பிரசாதத்தைத்தூக்கி எறி பது சம்பிரதாயம் என்கிருர் அமைச்சர்.

"நான் தோட்டி மகன்: ன்று நான் கோயிலுக் குள் பாகிறேன். பிரசாதம் பெறுகி றேன். என் வீட்டில் எவர் சில் வர் பாத்திரங்கள் புழங்கப்படு கின்றன" என்று கக்கன் பேசு கிருரே இது சம்பிரதாயத்திற்கு முரண் பட்டதில்லையா?

வெங்கட்ராமனுக்குப் பக்கத் தில் கக்கன் அமர்வது சம்பிர தாயத்திற்கு முரண் பட்ட தில்லையா?

அதட்டிக் கேட்டால் காங்கி ரஸ் சமத்துவத்தின் சாதனைகள் இவை என்பார்கள். இந்தச் சாதனை ஏன் திருச்செந்தூர் ஆல யத்தில் செல்லுப்படியாக வில்லை இந்த சமத்துவம் ஏன் கன்னியா குமரி ஆலயத்தில் பலிக்க வில்லை?

சோமநாதபுர ஆலயத்தை ராஜேந்திரப்பிரசாத் பிரதிஷ்டை செய்தது எந்தச் சம்பிரதாயத் திற்குக் கட்டுப் பட்டது?

இதே அமைச்சர் பக்தவத்சலம் சாப்பலாட்டப் போன சிரங்காத ருக்குப் பதிலாகச் செய்த 'புதிய நாதரை' திறந்து வைத்தாரே இது எந்தச் சம்பிர தாயத்திற்குக் கட்டுப் பட்டது? போன தேர்தலுக்கு முந்திய தேர் தலில் இவர் புரிந்த அரசியல் அநிதி மகத்தானது. அட்டேர்ப் பட்ட 'பாவாத்மா'வை கோயில் விக்ரகத்தையே திறந்து வைக்க சம்பிரதாயம் இடம் கொடுக்கும் போது ஒரு அமைச்சருக்கு அன் புடன் பிரசாதத்தைத் தர ஒரு ஒரு சம்பிரதாயம் இடம் தர வில்லை — தராது என்று கூறு வது வெந்தணலிலும் வேகாத பித்தலாட்டமாகும்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ண சாமி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வர வேற்கத்தக்கதே! மார்ஷல் டிட்டோ போன்றவர் களுக்கு பூரண குடும்பத்துடன் மரியாதை தரவில்லையா? அது கோயிலின் புனிதத் தத்துவத் தைக் குறைத்து விடாதா? என்று டாக்டர் கிருஷ்ணசாமி கேட்டிருக்கிருர். அது மட்டு மல்ல; மூலஸ்தானத்திலிருந்து பிரசாதத்தை உரிய மரியாதையு டன் வழங்க ஏன் ஏற்பாடுசெய் யப் படவில்லை என்றும் அவர் தந்த அறிக்கையில் கேட்டிருக் கிருர். இந்தக் கேள்வி நியாய மானவையே! இதற்கெல்லாம் கனம் 'மடாலயத்'திலிருந்துநாடு நல்ல பதிலை எதிர்பார்க்கிறது.

ஆனல் காங்கிரஸ் வட்டாரத் தில், அமைச்சர் இராமசாமி யார் அவமானப் பட்டதை சென்னை மந்திரிசபை மூடி மறைப்பதற்கு வேறு உட்கார ணங்கள் இருப்பதாக யூகிக்கப் படுகிறது.

பக்தவத்சலத்தின் நெருங்கிய உறவினரான அரியலூர் அள கேசனர் இருந்த பதவியில் ராமசாமியார் வீற்றிருக்கிருர்.

இப்படியாகத் தன்பகையை தனக்கு வேண்டியவர், களின் பெரும்பகையையும் எண் ணித்தான் பக்தவத்சலம் இப் படிப்பேசி யிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எதுவானலும் அர்ச்சகர்கள் நடந்து கொண்டது அநாகரிக மானது. அதற்கு அமைச்சர் பரிந்துபேசியிருப்பது அதைவிட கொடியது சாஸ்திர சம்பிரதாயம் களில் நம்பிக்கையில்லாத நேரு இது கேட்டு என்ன செய்யப் போகிருர்"

ஏன் இந்த பேதம்?

நாட்டிலே ஒரு குலம் பாடுபடாது உண்டு உறங்கிக் கிடக்க, மற்றவர் உடல்தேய, உள்ளமும் உணர்வும் தேய, உழைத்துக்கெடுவதா? பண்ணைகளில் பாடுபட்டுப் பயிர் செய்வது சீரகச் சம்பா, கிச்சிலிச்சம்பா இன்னவித உயர் வகுப்புப் பயிர்கள். ஆனல் அவன் உண்பது கால்வயிற்றுக் கஞ்சி, அதுவும் கம்பங்கூழோ, கேழ்வரகுக் கஞ்சியோதான். ஏன் இந்த பேதம்?

— அறிஞர் அண்ணு

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னதம்பி தெரு, சென்னை—1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.